மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது ஒரு முக்கியமான பாலமாக இருக்கிறது. கடலின் குறுக்கே வேறு எந்த இடத்திலும் பாலம் இல்லை. தமிழ்நாட்டில்தான் அத்தகைய பாலத்தை அமைக்க இருக்கிறோம். நாம் இப்போது பாரதியார் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'' என்று பாரதியார் பாடினார். இன்றைக்கு அந்த முறையில் இந்தப் பாலத்தைக் கட்டும் பணியில் நாங்கள் ஈடுபட்டுருக்கிறோம். எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம் : பாம்பன் பால வேலை முதல் ஒப்பந்தத்தில் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது? 1982 ஆம் ஆண்டு எவ்வளவு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது? ஒப்பந்தக்காரர்கள் வாங்கிய ஸ்டேயை வெகேட் செய்ய அரசு தீவிர முயற்சி எடுக்குமா? ஒப்பந்தக்காரர் யார் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1972 இல் போடப்பட்ட திட்டம் இது. அப்போது போட்ட மதிப்பீடு 538 இலட்சம் ரூபாய். இப்போது அது எட்டு கோடி, பத்து கோடியைத் தாண்டிவிடுகிறது. ஒப்பந்தக்காரர்கள் பெயர் நீலகண்டன் பிரதர்ஸ்,

அங்கம்பாக்கம் கிராமத்திற்கும், திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 149—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தாலூகா அங்கம்பாக்கம் கிராமத்திற்கும் திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் அமைக்கக்கோரும் பொதுமக்கள் வேண்டுதல் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வினாவில் குறிப்பிட்டுள்ள பணியை வருங்காலத்தில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செயலாக்க பரிசீலிக்கப்படும்.